# மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ



வெற்றிக்களிப்பில் நமது நாவலர்!

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 14—8—60 ஒலி 41

# வெற்றி விழா !

## அடுத்து

## விடுதலை விழா !

இன்றைய தினம் நாமெல்லோரும் வெற்றி விழாக் கொண்டாடி களிப்புக் கடலில் மூழ்கித் திளைத்துக் கிடக்கிறோம்! நாமெல்லாம் நாம் பட்டபாட்டிற்கு பலன் கனிந்து வருவதைக் கண்டு பெரு மகிழ்வு கொள்ளுகிறோம்!

தென்னகம் பெற்ற பேறைக் கண்டு நம் உள்ளமெல்லாம் பூரிக்கிறது, திராவிடம் பெற்ற புகழைக் கண்டு தீரர்களின் நெஞ்சமெல்லாம் விம்மி, விம்மி பெருத்து பெருமிதம் அடைகிறது!

அழுகுரல் கேட்க வேண்டிய மனைகளிலே ஆனந்தம் பொங்குகிறது!

மாரடித்து அழ இருந்த குடும்பங்களிலே மங்கள வாத்தியம் ஒலிக்கிறது!

தாலி அறுபட்டு விழ இருந்த இல்லங்களிலே தனி இன்பம் பொங்கி எழுகிறது!

பெற்ற பிள்ளையை பறி கொடுக்க இருந்த தாய், உற்றமகனை தத்தம் செய்து கொடுக்க இருந்த தந்தை, கரம் பிடித்த கணவனை காவு கொடுக்க இருந்த மனைவி அத்தனை பேரும் இந்த வெற்றியைக் கண்டு மகிழ்கிறார்கள்!

"வெற்றி, வெற்றி" என்று முழங்குகிறார்கள்— உற்றாரும், பெற்றாரும், ஊராரும், உறவினரும், கூடிக் கூடி மகிழுகிறார்கள்!

மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்களோடு மக்களாய் ஒன்று கலந்து நாங்களும் அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுகிறோம்! "வாழ்க—தமிழகம் வாழ்க—அங்கே தன்மானம் தழைத்து வாழ்க" என்று நாங்களும் உங்களோடு சேர்ந்து கூவி மகிழ்கிறோம்!

"இந்த வெற்றியை—"வெற்றியா" என்று கேட்கும் ஈனப் பிறவிகளுக்கும் இங்கே பஞ்சமில்லை!

நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர்களுக்கு இது வெற்றியாகத் தெரியாது—நாட்டுப் பற்றுள்ளவர்களுக்கு மட்டுமே இந்த வெற்றியின் அருமை, பெருமை தெரியும்! பிள்ளையை பெற்றவளுக்குத் தான் தெரியும் பிள்ளை பாசத்தின் மகிமை! மலடிகளுக்கு அந்த பாசத்தின் மகத்துவம் எப்படித் தெரியும்!

எனவே தான் அரசியல் மலடிகள் நம்மைக் கண்டு ஓலமிடுகிறார்கள் பொறாமையால் ஏசுகிறார்கள், பொச்செரிப்பால் மனம் குமுறுகிறார்கள்! அந்த பனித குலத்தைப் பதர்களை ஒதுக்கித் தள்ளுங்கள்! பெற்ற வெற்றியைக் கண்டு மகிழ்ந்து, பெற இருக்கிற வெற்றிகளுக்காகப் பாடுபட புறப்படுங்கள்!

குமாரபாளையத்தில் கூடி—"இந்தியைப் பற்றி ஜனாதிபதி விடுத்திருக்கும் புதிய ஆணையை வாபஸ் பெற வேண்டும்—இல்லா விட்டால் அறப்போர் தொடுப்போம்" என்று முழக்கமிட்டோம்!

எங்கிருந்தும் பேச்சில்லை, மூச்சில்லை! நையாண்டிகள் செய்ய மட்டும் எவரும் தவறவில்லை!

பிறகு மாநாடு கூடிற்று...அறப்போர் வீரர்கள் திரண்டனர்! அண்ணாவின கட்டளையை ஏற்றனர்—"குடியரசுத் தலைவருக்கு கறுப்புக் கொடிகளைப் பிடிக்கப் புறப்பட்டனர்!

கூவினர்கள் கொக்கரித்தார்கள்—மிரண்டார்கள்—மனம் இருண்டார்கள்! உடல் சுருண்டார்கள், உள்ளம் உடைந்தார்கள்! "மானம், மானம்" என்று பதறினார்கள்!

பணியாதவர்கள் பணிந்தார்கள், கொட்டம் அடங்காதவர்கள் அடங்கினார்கள்!

தலை வணங்கா நிதி அமைச்சர் தாள் பணிந்தார்—சிரந்தாழ்க்காத முடிசூடாமன்னன் முடங்கல் விடுத்தார்! இது வெற்றியா? தோல்வியா?

பாபு ராஜேந்திர பிரசாத் உறுதி மொழி தந்தார்! இது வெற்றியா? தோல்வியா?

கேலி செய்யும் சித்திரை பதுமைகள் பதில் சொல்லட்டும்!

இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் கறுப்பு கொடிகள் பிடிப்பது நீதியா? நேர்மையா? இதனால் எங்களுக்குத் தோல்வியா? அரசியலிலே நாகரீகம் தேவை என்பவர்கள் மட்டும் இதற்கு நல்ல விடை யளிக்க முன் வரட்டும்!

வீதிகளிலே திரிந்து கொண்டிருக்கிற பிள்ளைகளுக்கு இந்த வெற்றியின் மகிமை தெரியாது, தெரியமுடியாது! இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் நமக்கில்லை!

யார் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமோ, யார் நம்முடைய வலிவைப் பற்றி, பொலிவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் நம்மைப் பற்றி தெரிந்து விட்டது! "நாம யார்" என்பதை அவர்கள் அறிந்து கொண்டு விட்டார்கள்! இதுவே நமக்கு ஒரு பெரும வெற்றி யாகும்!

ஆனால் இந்த வெற்றியை வைத்துக் கொண்டு காலமெல்லாம மகிழ்ந்துக் கிடக்கப் போவதில்லை! இந்த வெற்றியைத் தொடர்ந்து மிகப் பெரிய போராட்டம் உருவாகும், உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை எல்லாரும் உணர வேண்டும்!

நமது செயற்குழுவின் தீர்மானத்தை ஊன்றி படித்தவர்களுக்கு இது கட்டாயம் புரிந்திருக்க வேண்டும்! அப்படி புரிந்து கொள்ளாமல் இருந்தால் இனியாவது புரிந்து கொள்ளட்டும்!

இந்தி ஒழிந்து விட்டது என்று நாங்கள் பெருமையோடு பேசிக் களிக்கவில்லை! தலைவர்கள் தந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று தான் நம்பி இருக்கிறோம்! அரசியல் நாகரீகத்திற்கு இந்த நம்பிக்கை மிக மிக அவசியமாகும்! அப்படி அவர்கள் கொடுத்த வாக்கை, நாணயத்தை காப்பாற்றவில்லையானால் அப்போது நாம் சோளக் கொல்லை பொம்மையாக இருந்து

(11ம் பக்கம் பார்க்க)

# இந்த வெற்றி ஆயிரமாயிரம் வெற்றிகளைத் தேடித் தரும்!

## திராவிட நாட்டிற்கு இந்தி தேவையில்லை! உலகப் பொது மொழியே எங்கள் பொது மொழியாகும்!

## இதை உணராத முதலமைச்சர் உணர வேண்டும்!

## கடற்கரையில் நாவலர் நெடுஞ்செழியன் வெற்றி முழக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையத்தின் சார்பில் 7-8-60ம் தேதி மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு மாபெரும் வெற்றி விழாக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சுமார் 5 லட்சம் பேர்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். ஆயிரக்கணக்கான தாய்மார்களும் வந்து திரண்டிருந்தார்கள்.

பல வட்டங்களிலிருந்து வெற்றி முழக்கங்களை முழங்கிக் கொண்டு தோழர்கள் ஊர்வலமாக வந்தார்கள்.


கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் குற்றலம் அரங்கநாதன், டேப் இராதமாணிக்கம் முதலிய தோழர்கள் இயக்க கீதங்களை முழக்கினர்கள்.

சென்னை மாவட்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. செங்குட்டுவன் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கியும், குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களுக்குக் காட்டவிருந்த கருப்புக் கொடியை நிறுத்திய தன் காரணங்களை விளக்கியும், நமது கழகம் கோரியிருந்த கோரிக்கைகளுக்கு மத்திய சர்க்கார் அமைச்சர்களும், குடியரசு தலைவரும் வாக்குறுதி யளித்திருப்பதையும் விளக்கிப் பேசி கூட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தலைமை வகிக்கும்படி வேண்டிக் கொண்டார்.

அதை திருவல்லிக்கேணி வட்ட திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர் திரு. வரதராசன் ஆமோதித்தார்.

பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே தலைமை வகித்துப் பேசியதாவது!

மதிப்பிற்குரிய பெரியோர்களே! நண்பர்களே! தாய்மார்



களே! அன்புமிக்க தோழர்களே! பாட்டாளிகளே!

சென்ற ஞாயிறன்று கோடம்பாக்கத்தில் நமது அண்ணா அவர்கள் தலைமையில் மாநாடு நடத்தினோம் அன்று நாம் ஒரு முடிவை எடுத்தோம் ஆனால், இன்று அந்த முடிவுக்கு வெற்றி கிடைத்திருப்பதை எண்ணி மகிழவும். அந்த வெற்றி எப்படி கிடைத்தது என்பதை யோசிக்கவும் மீண்டும் பல காரியங்களைச் சாதிப்பதற்கான திட்டங்களை வகுக்கவும், பெற்ற வெற்றியைப் பாராட்டவும், இந்த வெற்றி எப்படி கிடைத்தது என்பதை எண்ணவும், அது கிடைத்தின் நிலைமையை உணரவும் இன்று இங்கு கூடியிருக்கிறோம்!

கடந்த ஒரு வாரத்தில் ஏற்பட்ட சூழ்நிலையை நாம் சிந்திக்க வேண்டும்!

இன்று நமக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றி, எப்படிப்பட்ட வெற்றி, எந்த அளவு வெற்றி, இது எப்படி ஏற்பட்டது என்பதை விளக்கவே இந்த மாபெரும் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம்.

நாம் எந்த கோரிக்கைக்காக கோடம்பாக்கத்தில் மாநாடு நடத்தினோமோ, அந்தக் கோரிக்கை நமக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது. இன்று பெற்றுள்ள வெற்றி பெரும் வெற்றியல்ல! முடிவான வெற்றியல்ல, இருப்பினும் நாம் கோரிய கோரிக்கைக்கு நாம் எதைக் கேட்டோமோ அதற்கான வெற்றியைப் பெற்றிருக்கிறோம்! நாம் பெற வேண்டிய வெற்றி மிக ஏராளமானது. அந்த வெற்றிக்காக நாம் சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்!

நம்முடைய முக்கியமான கோரிக்கையை மறந்து விடவில்லை கொண்டிருக்கும் கொள்கையை விட்டு விடவில்லை இதைநாடாள வந்தவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் திட்டவட்டமாக தெளிவாக, சரியாக புரிந்து கொள்ள முடியாதவர்களும் புரிந்து கொள்ளுமாறு தெரிந்து கொள்ள முடியாதவர்களும் தெரிந்து கொள்ளுமாறு பல முறை கூறியுள்ளோம். நாம் முதல் கட்டத்தில் கோரிய கோரிக்கை நமக்கு வெற்றியை

# மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபடுவதே நம் மூலாதாரக் கொள்கை!

## தாய் மொழிக்கு இழுக்கு வருவதை எந்தத் தமிழனும் சகிக்க மாட்டான்!

## நம் கொள்கைகள் வெற்றி பெறும்வரை நமது அணிவகுப்புக் கலையாது!

...ந்திருக்கிறது. இந்த வெற்றி விழாவைத் தான் கொண்டாடுகிறோம். ஏன் கொண்டாடுகிறோம்?

நாம் இந்த வெற்றியைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்து விடக் கூடாது, நாம் இன்னும் தீவிர முயற்சியில் ஈடுபட வேண்டும். நாம் ஆலோசிக்க வேண்டிய முயற்சிகளுக்காகத் தான் இந்த வெற்றி விழாக் கூட்டம் இன்று இங்கே நடைபெறுகிறது.

நம்முடைய மூலாதாரக் கொள்கைகள் – இந்தியைப் பற்றிய நமது எண்ணங்கள்– அப்படியே இருக்கிறது. நாம் மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று சொல்லி வருகிறோம். நாம் ஆட்சி புரிவதற்கு — பொருளாதாரத்திற்கு, அரசியலை அறிந்து கொள்வதற்கு — ஒருவர் கருத்தை மற்றவர் அறிந்து கொள்வதற்கு–தமிழ் மொழியே போது. விஞ்ஞானத்தை அறிந்து கொள்வதற்கு, அயல் நாட்டோடு தொடர்பு கொள்வதற்கு இந்தி மொழியை விட ஆங்கில மொழியே உயர்ந்தது! சிறந்தது அது வே போதும் என்று தான் சொல்லி வருகிறோம்.

தமிழகத்தை கட்டிக் காத்துக் கொள்ள இந்தியை விட தமிழ் மொழியே போதும். தமிழகத்தில் மூன்றரை கோடி மக்கள் வசிக்கிறார்கள் மூன்றரை கோடி மக்களுக்கும் தமிழே போதும்! எங்களுக்கு இலக்கண மற்ற இலக்கியமற்ற புதிதாகக் கண்டு பிடிக்கப்படவிருக்கும் இந்தி தேவையில்லை! அதே போல் மூன்றரை கோடி மக்களைக் கொண்ட ஆந்திரத்திற்கு தெலுங்கு மொழியே போதும்! கன்னடத்திலுள்ள ஒன்றரை கோடி மக்களுக்கும் கன்னட மொழியே போதும் கேரளத்து மக்களுக்கு மலையாள மொழியே போதும்! இந்தி மொழி தேவையில்லை என்று தான் நாம் கூறி வருகிறோம்!

நாம் திராவிடத்தை அடைந்து கூட்டாட்சி நடத்துகிற பொழுது தான் நம் வாழ்வு மலரும்!

நாம் புது வாழ்வை அடையலாம்! நாம் புது வாழ்வு பெற தமிழ் மொழியே போதும்! எங்களுக்கு ஆட்சி மொழியாக தமிழே போதும்! அதே போன்று திராவிட மொழி நான்கும் திராவிட நாட்டிற்குப் போதும் என்று தான் கூறுகிறோம்!

உலகிலேயே மிகச் சிறிய நாடுகளெல்லாம் மொழி வழி பிரிந்து ஆட்சி நடத்தவில்லையா? 45 லட்சம் மக்களை கொண்ட சுவிட்சர்லாந்து 4 மொழிகளுடன் ஆட்சி நடத்துகிறது. 10 கோடி மக்களைக் கொண்ட திராவிடம் 4 மொழிகளுடன் ஆட்சி நடத்த முடியாதா?

இம்மொழி நான்கும் பண்பாட்டால், நாகரீகத்தால், எல்லையால், ஆற்றால், மலையால் ஒன்றுபட்ட மொழி! இது ஏன் ஆட்சி செலுத்த முடியாது? இம்மொழிகளுக்கு இலக்கண வளம் உண்டு! இலக்கிய வளமிருக்கிறது, ஆகவே அந்தந்த பகுதிகளுக்கு ஆட்சி செலுத்த இந்தியை விட அவரவர்களது மொழியே போதும்! அகில உலக தொடர்பு கொள்ள ஆங்கிலமே போதும் என்று திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். அண்மையில் நமது முதலமைச்சர் காமராசர் ஒரு இடத்தில் பேசும் போது சொல்லியிருக்கிறார், திராவிட நாடு கிடைத்தாலும் நான்கும் ஒன்றுபட்டு வாழ இந்தி அவசியம் வேண்டியது தான் என்று" நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆந்திரமும், கன்னடமும், கேரளமும் தமிழகமும் வார்த்தைகளில்கூட ஒன்றுபட்டு இருக்கிறது. தமிழகத்தில் கால், தலை நீர் என்பதற்கு அவரவர்களும், சிறுமாற்றத்தில் தான் உச்சரிக்கிறார்கள். ஆகவே நாங்கள் கடிதம் எழுத டமுக பேச, வாணிபம் நடத்த எங்களது தாய் மொழியே போதும்! அமெரிக்காவுடன் தொடர்பு கொள்ள, குருசேவோடு சமாதானம் பேச, ஜப்பானோடு உறவு கொள்ள, விஞ்ஞானப் புதுமைகளைக் காண ஆங்கிலமே போதுமானது!

வடநாட்டிலிருக்கும் பண்டித நேருவோடு தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே போதும்: இந்தி தேவையில்லை! இம்மியளவும் தேவையில்லை, ஒரு சிறிதும் தேவையில்லை என்று காமராசருக்கும் அறிவுறுத்துகிறேன்.

திராவிடக்கூட்டாட்சி ஏற்பட்டால், திராவிட மொழி நான்கும் ஆட்சி மொழியாகும்!

திராவிடக்கூட்டாட்சி ஏற்பட திராவிட மொழிகளை ஆட்சி மொழியாக்க நாட்டு மக்கள் ஆதரவு தர வேண்டும், நாட்டு மக்கள் இன்னும் இரண்டு மடங்கு ஒன்றுபட்டு ஆதரவு தந்தால் நிச்சயம்திராவிடம் பிரியும். திராவிடக் கூட்டாட்சி மலரும்! திராவிட மொழி ஆட்சி செலுத்தும்!

நமக்கு 1950ல் இருந்ததை விட 1960ல் மக்கள் ஆதரவு அதிகம் நமக்கு இப்பொழுது இருக்கும் ஆதரவு போதாது. இன்னும் ஏராளமான மக்கள் ஆதரவு தரவேண்டும். நம்மைப் பற்றி நாடு நன்கறிந்து கொண்டிருக்கிறது நம்மைப் பற்றி உலகமே நன்கறியும்.

நம்மிடத்தில் உணர்ச்சி மிக்க ஆற்றல் படை இருக்கிறது–அறிவுப்படை இருக்கிறது. மொழி வளமிருக்கிறது. இவ்வளவிருந்தும் நாம் ஏன், எதற்காக வடநாட்டு ஏகாதிபத்திறகும் இந்தி மொழிக்கும் அடிபணிந்து கிடக்க வேண்டும்?

இந்தியக் குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் வெளியிட்டுள்ள தாக்கீதில் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டப்படி 1965க்குபின் தேவநாகரிலிபியே ஆட்சி மொழியாக வரும் என்ற கருத்தை நாங்கள் தான் செஜாரடி என்ற ஆணவத்தில் வெளியிட்டிருக்கிறார். இந்த தாக்கீது இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து வந்த 128 மக்கள் சபை உறுப்பினர்களை மட்டுமல்ல—வங்காளம், மராட்டியம் அசாம் போன்ற மாகாணங்களை மட்டுமல்ல—சர். சி. வி. ராமன் போன்ற பேரறிஞர்களுக்கும், இன்னும் பெரிய அரசியல் மேதைகளுக்கும் சந்தேக மேற்பட்டது. குடியரசுத் தலைவர் தாக்கீது இந்து, 'மித்திரன்' போன்ற அரசியல் பத்திரிகைகளுக்கும், அரசியல் மேதை என்று கூறப்படும் ஆச்சாரியாருக்கும் சந்தேகத்தை உண்டாக்கியிருக்கிறது.

குடியரசுத் தலைவர் தாக்கீதில் 1965க்குப் பிறகு கட்டாயமாக இந்தி வந்தே தீரும் என்று தான் குறிப்பிட்டிருந்தது. இதை கண்ட இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள மக்கள் பலமாக எதிர்த்தனர், தங்கள் எதிர்ப்பு ஒலிகளை எழுப்பினர்.

பண்டித நேரு பாராளுமன்றத்தில் வாக்குறுதி யளித்தார்! இந்தி பேசாத மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தி ஆட்சி மொழியாக்கப்பட மாட்டாது அவர்கள் விருப்பப்படி ஆங்கில நீடித்திருக்கும் என்று கூறினார். அவர்கள் விருப்பம் அறியாது ஒன்றும் செய்ய மாட்டோம் என்று கூறினார். இவ்வாறு பாராளுமன்றத்தில் வாக்குறுதி யளித்தார். அவர் வாக்குறுதியை மீறி குடியரசுத் தலைவர் இந்த தாக்கீதில் கையொப்பமிட்டு 1965-க்குப் பின் இந்தி ஆட்சி மொழியாகும் எனப் பிரகடனப் படுத்தி விட்டார்!

நேரு கொடுத்த வாக்குறுதியைக் கேட்ட நாம் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தோம். களிப்புக் கடலில் மூழ்கினோம்.

ஆனால் குடியரசுத் தலைவர் அறிக்கை நம்மையெல்லாம் துயரத்தில் கொண்டு போய் விட்டது. இந்த நிலை எதேச்சாதிகாரப் போக்கின் தன்மையைக் காட்டுகிறது.

ராஷ்டிரபதியின் பிரகடனத்தைப் பற்றி போராட்டக் குழுத் தலைவர் அருமை நண்பர் சம்பத்தும், அறிஞர் அண்ணா அவர்களும் விளக்கமாக கூறுவார்கள்.

குடியரசுத் தலைவர் அறிக்கை "கண்ணன் தின்னும் டண்டம் வெண்ணை என்பது போலத்-

[11-ம் பக்கம் பார்க்க]

# எந்த அரசியல் கட்சியும் இதுவரை

## பெருத வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம் !

## இந்த வெற்றியைத் தேடித் தந்த என் தம்பிமார்களையெல்லாம்

# வாழ்த்துகிறேன் !

## கோடம்பாக்கத்தில் உங்களைப் பிரியும்போது, கண்கலங்கினேன் - இன்று வாழ்த்துகிறேன் !

## இதைவிட பெரும்பேறு, உங்களுக்கும் எனக்கும் வேறு ஏது?

# 5 இலட்சம் போர் வீரர்களுக்கு அண்ணா வழங்கிய வாழ்த்துரை !

சென்ற 7-8-60-ம் தேதி மாலை சென்னை கடற்கரையில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் மாபெரும் வெற்றி விழாக் கூட்டம் நடைபெற்றது.

ஐந்து லட்சம் பேர்களுக்கு மேல கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது:

அனபுள்ள தலைவர் அவர்களே, அருமை நண்பர்களே! தாய்மார்களே!

உங்களை யெல்லாம் இந்த இரவில சந்தித்து, இன்று நாம் பெற்றுள்ள மகத்தான வெற்றியைக் குறித்து நல வாழ்த்துக் கூறி அக மகிழ்வு கொளளவே உங்கள் முன் பேச வந்துள்ளேன்!

முதன் முதலாக உங்களையெல்லாம் நான் மனமுவந்து பாராட்டுவதுடன், எனது நெஞ்சுகந்த வாழ்த்துக்களை உஙகளுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தான் உங்களை வாழ்த்துவதற்கு உரிமை பெற்றவன. அரசியலில் உள்ள மற்றவர்கள் உங்களை வாழ்த்துவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது.

இன்று நமது வெற்றியைக் கண்டு பல அரசியல் வாதிகள் இழிவாகப் பேசுவார்கள். அவர்கள் பின் எப்படித் தான் பேசுவார்கள்? அவர்களிடம் பின் எதைத் தான் எதிர்பார்க்க முடியும்?

நாம் எதைக் கோரினோமோ அது கிடைத்து விட்டது.

எனக்கு முன் பேசிய நமது நண்பர்கள் உங்கள் முன் பேசினார்கள் அவர்கள் பேச்சில் எதிர்பார்த்த வெற்றியில்லை என்று கூறினார்கள்.

நான் ஒளி மறைவு இன்றி உங்களிடம் கூறி விட ஆசைப் படுகிறேன்.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றி மகத்தான வெற்றி—எதிர்பாராத வெற்றி இதைக் கொண்டாடுகிறோம்.



நான் உங்களை யெல்லாம் கோடம்பாக்கம் மாநாட்டில் கடுமையான போராட்டத்திற்கு அழைத்தேன். பலமான அடக்கு முறைகளுக்கு ஆளாவதற்கு வரும்படி அழைத்தேன். உங்களை யெல்லாம் தியாகத் தழும்புகளை ஏற்பதற்கு தயாராகும்படி அழைத்தேன். எந்த முறையான இன்னல்களையும் உயிர் தியாகங்களையும் செய்யும்படி அழைத்தேன். நீங்களும் மனமுவந்து வரத் தயாரானீர்கள்! உங்களிடம் ஒரு உண்மையான விஷயத்தைக் கூற விரும்புகிறேன்.

கோடம்பாக்கத்தில் நடைபெற்ற மாநாடு முடிந்ததும் கண் கலங்கினேன். உங்களை விட்டுப் பிரியும் போது உங்களையெல்லாம் நினைத்து வேதனைப் பட்டேன். நீங்கள் அடையப் போகும் இன்னல்களை யெல்லாம் எண்ணி, எண்ணி மனம் நொந்து வீடு திரும்பினேன். அந்த வேதனைகளையும், அச்சங்களையும் நானே மனதில் வைத்து வெம்பிக் கொண்டு வீடு திரும்பினேன். நமது கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு—நம்முடைய எண்ணங்கள் முடிவு பெறவ

[7-ம் பக்கம் பார்க்க]




## முன் கதைச் சுருக்கம்

ஆத்தூர் மாஜி ஜமீந்தார் தனசேகர்ம பிள்ளையைப்பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாக இருந்தது இப்படி வாரி வாரி வழங்க அவனுக்கு எப்படி மனம் வந்தது? அன்னதானம செய்கிருன், பூதானம செய்கிருன— ஏழை எளியவர்களைக கண்டால் மனமிறங்கி வாடுகிருன்! ஏன்? இந்த மர்மம் பலருககுப் புரியாமலேயே இருந்து வந்தது!

இந்த மர்மம் புரியாதவர்களில் பலா—' என்ன இருந்தாலும் காந்திய வாதயல்லவா'' என்று போற்றினர்!

"காந்தியவாதிகளுக்கு ஆண்டான், அடிமை ஏது? ஜாதி, மத மேது? அதனுல் தான் தன்னிடம் அடிமை வேலை செய்யும கந்தனுக்கு தன் நிலத்தை பட்டா செய்து வைத்தான்" போலும் என்று பேசிய பேசி மிகிழ்ந்து கிடந்தார்கள்!

ஊராருககு என்ன தெரியும் அவன் செய்யும் தானதர்மங்களிலே எத்தனை சுயநலம, எத்தனை லாபம என்பதை எடைபோட்டு கணக்குப் பார்க்கும் சக்தி அவனுக்கு மட்டுமே தான் உண்டு!

தனசேகரம் பிள்ளை, ஜமீந்தார் பட்டத்தை தான் ஆழந்தாரே தவர அவருடைய அந்தஸ்தை அவர் இழககவல்லை, அவருடைய ஆடம்பரத்தை அவர் இழக்கவல்லை, அவருடைய பெருமையை அவர் இழக்கவில்லை, அவருடைய புகழை அவர் இழக்கவில்லை, அவருடைய பொருளை அவர் இழக்கவில்லை, அவருடைய செல்வத்தை அவர் இழக்கவில்லை—பருக கண்ணும கருத்தாகவும் தான் அவைகளைக் காத்து வந்தார்! என்ருலும் இந்த திடீர் மாற்றம் எப்படி வந்தது என்று எல்லோரும் திகைக்கத் தான் செய்தார்கள்!

தனசேகரம் பிள்ளை, தன் பண்ணையாள் கந்தனிடம் இரட்டிப்பு கடன் பத்திரம் எழுதி வாங்கிக கொண்டு 30 ஏககர் நிலத்தை சாசனம் செய்து கொடுத்தார் என்ற விஷயம எல்லோருக்குமே தெரியாது அல்லவா! அதனுல் தான் தனசேகரம் பிள்ளையை ஊரார் "பாரி வள்ளல" என்று புகழத் தொடங்கினாகள்!

பட்டாதான் கந்தனிடம் இருந்ததே தவர அனுபவ பாத்தியமெல்லாம தனசேகரம பிள்ளையிடம் தான இருந்து வந்தது!

சர்க்காரின் நிலச் சீர்திருத்தச்சட்டத்திலிருந்து தப்பிவித்துக கொள்ளவும். ஊர் மக்களிடம் பாரிவள்ளல் என்ற பட்டத்தைப் பெற்று மகிழவும்—அதனல் தன்னுடைய "தேர்தல்புரி யாத்திரையை" எளிதாக்கிக் கொள்ளவும் தான் இந்த முறையைக் கையாண்டிருககிருர்! இல்லாவிட்டால் அவருக்கென்ன பைத்தியமா? அல்லது பிள்ளை இல்லா வீட்டுச் சொத்தா?

அவருடைய செல்ல மகள் சாந்தாவுக்காகத் தானே அவர் உயிர் வாழ்வதே! அவள் படிக்க வேண்டும், பட்டம் பெற வேண்டும்! ஊர் மெச்ச உலகம் மெச்ச புகழோடு வாழ வேண்டும் என்பது தான் அவருடைய எண்ணம்! அதனுல் தான் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு படிக்க அனுப்பி வைத்தார்! ஆனல் தனசேகரம் பிள்ளையின எண்ணம் நிறைவேறிற்ரு என்ருல் அதுதான் இல்லை!

சாந்தா மருத்துவக் கல்லூரியில் படித்தது மருத்துவ சாஸ்திர புத்தகங்களை அல்ல – மனேவியாதியைத் தீர்க்கும் காதல் பாடங்களைத்தான் படித்தாள்! அந்த கல்லூரி மாணவன் ராஜனதான் அவளுக்கு குருவானன்! ஆரம்பத்தல் அப்பாவியாக இருந்த அந்த ஆசிரியர் காலம் செல்லச் செல்ல பாடபுத்தகத்தின் பக்கங்களை வேகவேகமாகப் புரட்டிக் கொண்டே சென்ருன்! மூன்றே நாளில்பாஸ்—நூற்றுக்கு நூறு மார்க்கும் கிடைத்தது! குருவும், சிஷ்யையும் 'பிசிக்கல்" ட்ரெயினிங்க் செய்ய ஆரம்பித்தார்கள்! அதற்கு மெரினு கடற்கரை மிக ஏற்ற இடமாக இருந்தது!

கசக்கும் கல்லூரி பாடத்தைவிட, இனிககும் கடற்கரை பாடத்தைப் படிபபதிலேயே அவள் மூழ்கிக் கிடந்தாள்!

ஆசிரியருக்கு அத்தான் பட்டம் கிடைத்தது-சிஷ்ய பிள்ளைக்கு— "தேனே மானே, தெவிட்டாத தெள்ளமுதே" என்ற புகழுரை கிடைத்தது!

இருவரும் ஊருக்குப் புறப்பட்டார்கள்!

இதற்கிடையில் தனசேகரம் பிள்ளையின் வாழ்க்கையில் உதய சூரியன் குறுக்கிட ஆரம்பித்தான்!

உதய சூரியன் முற்போக்குவாதி, "தென்னகம் விடுதலை பெற வேண்டும், எது தடையாக இருந்தாலும் அந்தத் தடையை சுக்கு நூருக உடைத்தெறிவேன்" என்று வீர சபதம் பூண்டிருந்தான்! இதனுல் தனசேகரம் பிள்ளையின் சுயநலத்தை ஊர் மக்களுக்கு சொல்லி அவருடைய போலி வேஷத்தைக் கலைக்க ஆரம்பித்தான்!

பொது மக்கள், தனசேகரம் பிள்ளையிடம் வைத்திருந்த அன்பு வெறுப்பாக மாற ஆரம்பித்தது! இந்த வெறுப்பு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வரை ஆரம்பித்தது!

இந்த வெறுபபை போக்குவதற்காக தன் மகள் சாந்தாவை சமூக சேவையில் ஈடுபடுத்தினர்!

ஆரம்பப் பள்ளியில் தேர்ச்சிப் பெற்ற சாந்தா காதல் கல்லூரியில் நுழைய ஆரமபித்தாள்! ஆரம்பப் பள்ளி ஆசிரியரை விட கலலூரி புரபசர்கள் அனுபவத்தில் முதர்ந்தவர்கள் அல்லவா? எனவே ராஜன் மீது வெறுப்பு உண்டாயிற்று! கல்லூரி ஆசிரியர்களின் அனுபவ பாடம் அவளுக்கு மெத்தவும் மகிழ்ச்சியைத் தந்தது!

குடிசைகளுக்குச் சென்று, ஏழை முகம் பார்த்து, எளியவர் துயர் துடைத்து, அவர்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டிய சமூகசேவகி சாந்தா, மாந்தோப்பும், தென்னந் தோப்புமே கதியாகக் கிடந்தாள்!

உலைவாயை மூடினுலும். ஊர் வாயை மூட முடியுமா? ஊர் மக்களுக்கு சாந்தாவின் விஷய முழுவதும் தெரிந்து விட்டது!

இந்தப் பெரிய் இடத்து விவகாரத்தால் உதய சூரியனின் மதிப்பும் உயர ஆரம்பித்தது!

உதய சூரியனிடம் ஆயிரக் கணககான இளைஞர் படைபாசம் வைத்திருந்தது என்ருலும் அவனுடைய அறிவுக்கு பலியான ஜீவன் இலட்சக் கணக்கில் இருந்த போதிலும், ஒரே ஒரு ஜீவன மட்டும் அவனது வாழ்வுக்கு துணையாக இருக்கத் துடி துடித்தது!

அவள அழகில் அஜந்தா ஓவிய மல்ல-செல்வத்தில் டாட்டா, பிர்லாவு மல்ல!

பின ஏனே இந்த பாசம்? உதய சூரியனைக் கண்டால் தான் செந்தாமரை மலரும்-ஆமாம், சற்குணவின் முகமும் அப்படித் தான் (தொடரும்)

(அண்ணு பேச்சு)

(12-ம் பககத் தொடர்ச்சி)

மங்கியதில்லை.

இங்கு எவனும் கோழையாக இருக்க மாட்டான். அந்த நேரத்தில் கோழையும் வீரனுவான் கூனனும் நிமிர்ந்து நடப்பான். குருடனும் கண் விழித்து நடப்பான். செவிடனுக்கும் காது கேட்டு வீர நடை போட்டு போர் முழக்கம் செய்வான் தமிழகமே கொதித்து எழுந்து நிற்கும்! "வாழ்ந்தால எஙகள் இன்பத் தமிழோடு வாழ்வோம், இன்றேல் இங்குள்ள அனைவரும் ஒன்ருகச் செத்து மடிவோம்" என்று போர் பரணி பாடுவார்கள்.

இங்கு கூடியுள்ள உங்களையெல்லாம் பார்ககும் போது பிரஞ்சு நாட்டில் நடைபெற்ற புரட்சியைப் பற்றிக் கூருமல் இருக்க முடியவில்லை. பிரஞ்சு நாட்டில் நடை பெற்ற வெறிச் செயல்களையும், அடக்கு முறைகளையும், ஆணவப் போககுகளையும் எதிர்த்து அங்குள்ள மக்கள் போராடினார்கள் பிரஞ்சு நாட்டு அரசாங்கம் அவர்களை அடக்க முயற்சித்தார்கள். சிறையில்தள்ளினுர்கள்!

இப்படிச் செய்யப்பட்ட சிறைககு "பாஸ்டிலி" சிறை என்று பெயர் அந்த சிறையை உடைத்து தூளாக்க மக்கள் நினைததார்களா. பெரும் படை ஒன்று பாஸ்டிலி சிறையை நோக்கிப் புறப்பட்டது! எதிரே ஒரு சிறு படை ஊர்வலமாக வநதது. இந்தப் பெரும் படையைபார்த்து எங்கே போகிறீர்கள என்று எதிரில் வந்த சிறு படை கேட்டது. பாஸ்டிலி சிறையை உடைக்கப் போகிருேம் என்று பெரும் படையினர் கூறினுர்கள். உங்களுக்கு அந்த வேலையில்லாது நாங்ள் செய்து விட்டோம் என்று சிறுபடையினர்கள் கூறினுர்கள் அதுபோன்றது தான் இன்று நமது போரும்

அந்த வெற்றி நம்முடைய மகிழ்ச்சிக் குரிய பெரும் வெற்றி என்று எண்ணி அக மகிழ்ந்து வீடு செல்லுங்கள். கூறி விடை பெறுகிறேன.

# குடியரசுத் தலைவரே !

# உங்கள் நிம்மதிக்குக் காரணம்

## எங்கள் கண்ணியமே! உங்களது பாதுகாப்பு படையல்ல !

### அகில உலகத் தலைவர்களுக்கு மட்டுமே கடிதமெழுதிய கரம்– என் சம்பத்துக்கும் கடிதமெழுதிற்று இது வெற்றியல்லவா ?

(அண்ணா பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு நாம் அன்று செய்த முடிவைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது.

அது தான் நமக்குக் கிடைத்துள்ள ஒரு சாதனம் அதைச் செய்து தான் தீர வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படிச் செய்வதால் ஏற்படும் பலன்களையும் நாம் அனுபவித்தே தீருவதென்ற நிலைக்கும் வந்தோம்.

ஆனால் நாம் எதிர்பாராத முறையில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றி நமக்கு ஒரு துளிகேடும், ஒரு துளி நஷ்டமும் ஒரு துளி தொல்லையும், எந்தவித இடுக்கண்களும் இல்லாது கிடைத்திருக்கிறது. எந்தவித தியாகத்தையும் செய்யாத நமக்கு இந்த வெற்றி கிடைத்திருக்கிறது.

இன்று நாம் பெற்றுள்ள இந்த வெற்றி சாமான்யமான வெற்றியல்ல.

இந்த வெற்றியைக் கண்டு பலர் ஏளனம் செய்வதாகவும். கேலிசெய்து வருவதாகவும் நமது நண்பர்கள் பேசினார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், திருமணம் ஆகாத ஒருவன் திருமணம் ஆகப் போகின்றவனைப் பார்த்து கேலி செய்தாலும் அவனுக்கு ஏற்பாடு செய்த பணப் பெண்ணைப் பார்த்து குறைகள் கூறினாலும் இது போல தான் நம்மைப் பார்த்துக் கேலி செய்பவர்கள் நிலை.

கோடம்பாக்கம் மாநாட்டில் இந்தியக் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி பிடிப்பதென தீர்மானம் நிறைவேற்றப் பட்டதும் இந்த நாட்டில் உள்ள சிலர் நம்மை அச்சுறுத்தினர், "குடியரசு தலைவருக்காகக் கறுப்புக் கொடி என்று வினவினர், இன்னும் சிலர் கேலி செய்தனர் இகழ்ந்தனர். ஆனால் மற்றும் சிலர் இதனால் என்ன நன்மை ஏற்படுமென்று விளக்கம் கேட்டனர்.

போலீஸ் இலாகாவைச் சேர்ந்த பேலதிகாரி ஒருவர் என்னிடம் வந்து கேட்டார். பாபு ராஜேந்தர பிரசாத்துக்குக் கறுப்புக் கொடி காட்டுவதால் நீங்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைத்து விடுமா" என்று

நான் அவரிடம் திட்டவட்டமாகக் கூறினேன், "நிச்சயமாக எங்களுக்கு எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமென்று இந்தச் செய்கையால் எதிர்பார்க்கு பலனைப் பெற்றேத் தீர்வோம் என்றும் ஆணித் தரமாகக் கூறினேன்.

அந்த அதிகாரி என்னை அதிகாரி என்ற முறையில் கேட்கவில்லை அரசியல் கருத்துக்களுக்கு விளக்கம் கேட்பதற்காகவே அவ்வாறு கேட்டார்.

அந்த அதிகாரியிடம் நான் அவ்வாறு பதில் கூறி விட்டேனே ஒழிய என் மனதில் பல சந்தேகங்கள் உதித்துக் கொண்டு தானிருந்தது.

மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முறியடித்து விட்டதாக ஆணவம் கொண்டிருக்கிற மத்திய அரசினர் நமது கோரிக்கைக்கா பதிலளிக்கப் போகிறார்கள் என்று நான் எண்ணினேன்.

ஆனால் இப்போது தொடர்ச்சியாக நடந்துள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது, இன்று தொடர்ச்சியாக நடந்திருக்கும் செய்கைகளைப் பார்த்ததும் என்னை ஒரு உலுக்கி உலுக்கி விட்டது.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றியை சாதாரணமான வெற்றியென்று எவரும் கருதிவிட முடியாது. இந்த வெற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில பொன்னெழுத்தில் வரையப்பட வேண்டிய மாபெரும் வெற்றி யாகும்.

எல்லாரையும் அடக்கி ஒடுக்கி விட்டதாக ஆணவமடைந்துள்ள வடநாட்டு அரசினர் நமது கோரிக்கைக்கு இணங்குவார்களா ? நமக்கு மதிப்பளிப்பார்களா ? என்று நான் எண்ணியிருந்தேன்–நான் மட்டுமல்ல நம்மை எப்பொழுதும் ஒரு மாதிரியாகவே கேலி பேசி வரும் அரசியல்வாதிகளும் கூட எண்ணினார்கள் அப்படியிருந்தும் நாம் எதிர்பாராத வகையில நமக்கு இந்த வெற்றி கிட்டியிருக்கிறது. இந்த வெற்றி நமக்குக் கிடைத்துள்ள அரசியல் தஸ்தாவேஜுகளாகும் பண்டித பந்தும், நிதியமைச்சர் சுப்பிரமணியமும் பேசியதை வைத்து ஆராய்ந்து கொண்டு நான் இருந்த போது, இன்று அரசியலில் காங்கிரசில் முக்கியமான தலைவராக உள்ள எனது நண்பரொருவர். அவரது பெயரை இந்தக் கூட்டத்தில் குறிப்பிடுவது அவ்வளவு நல்லதல்ல என எண்ணுகிறேன்.

தொலை பேசியில் என்னுடன் பேசினார். அவர் பேசும் போது ஹைதராபாத்தில் குடியரசுத் தலைவர் பேசவில்லை! சம்பத்திற்கு நேரு கடிதம் வரையவில்லை. அவர் என்னைக் கேட்டார். "நிதியமைச்சர் சுப்பிரமணியத்தின் பேச்சையும், பந்தின் பேச்சையும். படித்தீர்களா? என்று.


"படித்தேன்" என்று பதில் கூறினேன்.

இவைகள் வந்த பின்னுவது மாற்றங்கள் உண்டா என்று கேட்டார்.

இந்தப் பேச்சுகளெல்லாம் கொதிப்படைந்துள்ள எங்கள் மனதை குளிர்ச்சி யடையச் செய்து விடாது என்று கூறினேன். அதற்கு அந்த நண்பர் நீங்கள் என்ன தான் எதிர்பார்க்கிறீர்கள் என்றார் எங்களுக்குப் பண்டித நேருவிடமிருந்து வாக்குறுதி வர வேண்டுமென்று சொன்னேன். 'நேருவிட

( 8-ம் பக்கம் பார்க்க)


விற்பனையாகிறது !




கண் கவர் மூவர்ண மேலட்டையுடன்

விலை 25 காசுகள்

—: விபரங்கட்கு :—

அண்ணா பதிப்பகம் சென்னை-11.

எல்லா ஊர்களிலும் எமது வெளியீடுகளை விற்பனை செய்ய ஏஜண்ட்டுகள் தேவை ஏஜண்ட்டுகளுக்கு 33 ஒன்றின் கீழ் மூன்று பாகம் கழிவு உண்டு தேவைக்கு கழிவுநீக்கி முன் பணம் அனுப்பினால், பிரதிகள் அனுப்பப்படும். ஒரு பிரதி வேண்டுவோர் 35 புதிய காசு அஞ்சல் தலை அனுப்பிப் பெறலாம்.

# நமது வீரப் போர்ப்படை இன்னும் கலைக்கப்படவில்லை! அது அணிவகுத்தே நிற்கும்!

## வாழ்ந்தால் இன்பத் தமிழோடுதான் வாழ்வோம்- இன்றேல் செத்து மடிவோம்!

## மொழிக்கு ஆபத்து என்றால்

### கோழை வீரனாவான், கூனன் நிமிர்வான், குருடனும்பார்வை பெறுவான்!

### நிதியமைச்சரே! தந்த வாக்குறுதியை மறக்க வேண்டாம்!

### நாளை சட்டசபைக்கு வருகிறேன் - அங்கேயும உங்களைச் சந்திக்கிறேன்!

(அண்ணா பேச்சு)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்தா?" என்று ஆச்சரியமாகக் கேட்டார். "ஆம் நேரு விட மிருந்தே தான், அதுவும் இன்னும் இரண்டு தினங்களில் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்" என்று கூறினேன்.

நான் கோடம்பாக்கம் மாநாடு முடிந்ததும் தம்பி சம்பத்தை டெல்லிக்கு அனுப்பியிருந்தேன் நண்பர் சிவஞானம் அவர்கள் போராட்டத்தை, வைத்துக் கொண்டு சம்பத் டில்லிக்கு ஏன் ஓட வேண்டுமென்று கேட்டாராம்!

நான் கூறுகிறேன் தம்பி சம்பத் டில்லிக்கு ஓடவில்லை பறந்து தான் சென்றார்!

நான் தம்பி சப்பத்தை டில்லிக்கு நீ. இன்றிரவு போக வேண்டும் என்று கூறியதும் அவன் முகத்தில் ஈயாடவில்லை. முகத்தில் கவலைக் குறி தென்பட்டது.

நமது அண்ணா, நம்மை டில்லிக்கு அனுப்பி விட்டு போராட்டத்தை நிறுத்தி விடுவாரோ என்ற பயம் வந்திருக்கக் கூடும்!

சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவன் முகத்தைப் பார்த்து வந்துள்ள நான் முகத்தில் தென்பட்ட வாட்டத்தைப் புரிந்து கொண்டேன். முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைத்தெரிந்து கொண்டேன்.

சம்பத் டில்லிக்குப் போக வேண்டிய தன் அவசியத்தை விளக்கி டில்லிக்குப் போகும்படி கூறினேன்.

நாம் கோடம்பாக்கத்தில், குடியரசுத் தலைவர் சென்னைக்கு வரும்போது கறுப்புக் கொடி காட்டுவதென்று முடிவெடுத்தோம். அந்த முடிவு டில்லியிலுள்ளோரை மிரள வைத்து விட்டது.

பாராளு மன்ற உறுப்பினர்கள் எல்லாம் பர பரப்புடன் நமது சம்பத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் 15 பேர்கள் கையெழுத்திட்டு நேருவிற்குக் கடிதம் எழுதி அனுப்பி இருக்கிறார்கள்.

அந்த 15 பேர்களில் வங்கத்தைச் சேர்ந்தவர்களும், அஸ்ஸாமைச் சேர்ந்தவர்களும் மற்றும் சிவராஜ் போன்றவர்களும் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

குமாரபாளையத்தில் பொதுக்குழு கூடிய மறுநாள் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் பேசும் போது கூறினேன், "நமது சம்பத் டில்லிக்குச் சென்றால் எத்தனை பேர்கள் கைப் பிடித்துக் கேட்பார்கள். கன்னத்தைப் பிடித்து, முகவாயக் கட்டையைப் பிடித்து அவரிடம் கெஞ்சுவார்கள் என்று. அதைப் போலத் தான் அங்கு நடந்திருக்கிறது.

நம் சம்பத் டில்லியிலிருந்து என்னை டெலிபோனில் கேட்டார். "பதினைந்து பாராளு மன்ற உறுப்பினர்கள் இந்தி விஷயமாக நேருவுக்குக் கடிதம் அனுப்புகிறார்கள். நான் அதில் கையெழுத்திடலாமா? என்று

(12-ம் பக்கம் பார்க்க)



# சர்ச்சில், ஸ்டாலின், லெனின், குருஷேவ், ஐசனேவர், சூ-என்-லாய், நாசர், நேருவும் காணாத அரசியலை நமது காமராஜர் கண்டுபிடித்திருக்கிறார்!

## தமிழகம் பெற்றெடுத்த இந்த "கொலம்ப"சை

## நாம் மட்டுமல்ல—உலகமே பாராட்டும்!

நமது மதிப்பிற்குரிய சென்னை மாநிலத்து முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்கள், நம்மீது கடும் மொழிகளை வீசி தாக்கி இருக்கிறார்! கொடுஞ் சொற்களால் சாடி இருக்கிறார்! கொஞ்ச காலமாகவே காமராஜ் ஆவேசமாகப் பேசி வருகிறார்! இதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டு பிடிக்க பெரிய ஆராய்ச்சிக் கூடம் அமைத்து, பெரிய பெரிய அரசியல் நிபுணர்களை அழைத்து ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை! எல்லாம் 62 ஜுரம் தான்! தேர்தல் ஜுரம் அவரை இப்படி யெல்லாம் பேசச் சொல்லுகிறது! "இது அரசியல் வாதிகளுக்கே இயற்கை" என்று கூறினால் அதற்கு மறுத்துக் கூற நாங்கள் தயாராக இல்லை!

அவருடைய தூத்துக்குடி பேச்சு எங்களைப் பெரும் அதிசயத்தில் ஆழ்த்தி விட்டது! எங்களை மட்டுமல்ல, எங்களைப் போன்ற அரசியல் வாதிகளையும், எங்களைப் போன்ற அரசியல் வாதிகள் இருக்கும் அரசியல் உலகத்தையுமே அதிசயத்தில் ஆழ்த்தி இருக்கும்!

"காமராஜர் ஒரு பெரும் உழைப்பாளி காமராஜர் ஒரு பெரும் தொண்டர், காமராஜர் ஒரு பெரும் தியாகி, காமராஜர் ஒரு சிறந்த அரசியல் வாதி, காமராஜர்—அவருடைய தொண்டர்கள் கொஞ்ச நாளாகக் கூறி வருவது போல் ஒரு பெரும் படிக்காத மேதை" என்றே எண்ணி வந்தோம்!

ஆனால், அவருடைய தூத்துக்குடி பேச்சு இத்தனைக்கும் விதிவிலக்கு அளித்து விட்டது!

திராவிட முன்னேற்றக் கழகம் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி பிடிப்பது அவருக்குப் பெருத்த மன எரிச்சலை உண்டாக்கி இருக்கலாம், பெரும் வேதனையை உண்டாக்கி இருக்கலாம், பெரும் கவலையைத் தந்திருக்கலாம்! அதனால் எதையுமே பேசி விடுவதா? தனக்கிருக்கும் அந்தஸ்தை மறந்து, தனக்கிருக்கும் பதிப்பை மறந்து, தனக்கிருக்கும் உலக அனுபவ அறிவை மறந்து பேசிவிடுவதா? அப்படி பேசினால் சாதாரண பணிதருக்கும், அவருக்கும் தான் என்ன வித்தியாசம்!

எங்களைத் திட்டிப் பேசியதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை! எங்களை "ஒழிப்பேன், அழிப்பேன்" என்று உறுமியதற்கு கூட நாங்கள் அஞ்சவில்லை! ஆனால் அவர் ஒரு முதல் அமைச்சர்! அந்தப் பெரும் பதவிக்கு பங்கம் வரலாமா? அவர் நீண்ட நெடுங்காலத்து அரசியல் வாதி! அந்த அனுபவ அறிவை கொஞ்சமும் மறந்து பேசலாமா?

தமிழகத்து மக்களுக்கு, தமிழகத்து மக்களுக்கென்ன—தமிழகத்து அமைச்சர்களுக்கே அரசியல் தெரியவில்லை என்று உலகம் தூற்றுமே! ஐயோ உலகம் தூற்றுமே!

காமராஜருடைய தூத்துக்குடி பேச்சை எந்த அரசியல் மேதைகளிடமாவது 'எப்படி' என்று கேட்டுப் பாருங்கள்! ஏன், தூத்துக்குடியில் பேசி விட்டு வந்த அந்த முதலமைச்சரையே கேட்டுப்பாருங்கள்!

"அங்கே பேசிய பேச்சு சரிதானா" என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கச் சொல்லுங்கள், "ஆத்திரத்தால் பேசியவர்—இப்போது, "ஐயோ அப்படியா பேசி விட்டேன்" என்று தான் அவர் ஆயாசப்படக்கூடும்!

"தங்கள் டவுனுக்கு ஜனாதிபதி வரும்போது மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று தி. மு. க.வினர் வேண்டுகோள் விடுக்கட்டும், இதனால் டவுன்களில் ஜனப் போக்குவரத்தில்லாமல் போய், ஜனாதிபதி பேசும் கூட்டங்களிலும் கூட்டமே இல்லாமல் போனால் மக்கள் தி. மு. க. வினர் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்திருக்கிறார்கள் என்று நாங்கள் புரிந்து கொள்வோம்! சட்டசபைக்கு வெளியில் ஒரு காரணத்துக்காக கிட்டும் ஆதரவை நிதானித்துக் சொல்வதற்கு இந்த ஏற்பாடு தான் விவேகமானது!

தமிழ் நாட்டு வாக்காளர்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்த ஜனாதிபதிக்கு கறுப்புக் கொடி காட்டினால் அது தமிழ் நாட்டு வாக்காளர்களுக்கே அவமானம்! ரௌடிகளாகவுள்ளவர்கள் தான் இத்தகைய ஆர்ப்பாட்டங்களால் விளையக் கூடிய குழப்பத்தைக் கண்டு சந்தோஷிப்பார்கள்!"

குடியரசுத் தலைவருக்கு திராவிட முன்னேற்றக் கழகம் காட்ட இருக்கும் கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்கு ஒரு அரிய பெரிய மாற்று யோசனையை நமது முதலமைச்சர் கனம் காமராஜர் கூறி இருக்கிறார்!

இந்த அரசியல் உலகத்தில் எத்தனையோ அரும் பெரும் அரசியல் வாதிகள் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்! அவர்களுக்கெல்லாம் இந்த சாலச் சிறந்த வழி தெரிந்ததா?

அரசியல் உலகத்தில் சர்ச்சில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறார்! அவருக்கு இப்படி ஒரு அரிய யோசனை எட்டவில்லையே! இதை நினைத்து நினைத்து சர்ச்சில் இப்போது தான் வருந்தி இருப்பார்! "ஐயோ இந்த பெரிய யோசனையை காமராஜர் அப்போதே சொல்லவில்லையே" என்று துயர் மிகக் கொண்டு வாடி இருப்பார்!

நீண்ட நெடுங்காலமாக அரசியல் வானிலே மின்னி ஜொலித்துக் கொண்டிருக்கும் நேரு பெருமகனாருக்கும் இந்த பேச்சு ஒரு பக்கத்திலே துக்கத்தையும், ஒரு பக்கத்திலே மகிழ்ச்சியையும் தந்திருக்கும்!

எந்த பெரும் மேதைக்கும் எட்டாத இந்தபெரும் யோசனையை ஒரு பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பேயே சொல்லி இருக்கக் கூடாதா என்று துக்கப்பட்டிருப்பார்!

இந்த யோசனையை காமராஜர் 1942க்கு முன்பேயே சொல்லி இருந்தால்—தண்டவாளத்தைப் பெயர்த்திருக்க மாட்டோமே, தந்தி கம்பிகளை அறுத்திருக்க மாட்டோமே, தபால் நிலையங்களை அக்கினிக்கு இரையாகப் போட்டிருக்க மாட்டோமே! ரௌடிகளைப் போல் வீண் ஆர்ப்பாட்டங்களை செய்து குழப்பங்களை உண்டாக்கி இருக்க மாட்டோமே!

இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொல்லும் யோசனையை 1942லேயே எனக்குச் சொல்லி இருந்தால் எத்தனையோ விபரீதங்களைத் தடுத்திருக்க முடியுமே! 40 கோடி மக்களை ஒன்றாகத் திரட்டி—வெள்ளைக்காரனைப் பார்த்து—"உனக்கு ஒரு ஆள் கூட இல்லை—கலெக்டர் வேலைகளுக்கு ஆளில்லை, தாசில்தார் வேலைகளுக்கு ஆளில்லை, சுபேதார் வேலைகளுக்கு ஆளில்லை, சிப்பாய் வேலைகளுக்கு ஆளில்லை கிஸ்தி கணக்குப் போட்டுத் தரும் கணக்கப்பிள்ளை வேலைகளுக்கு ஆளில்லை, அதை வசூல் செய்து தரும் பட்டா மணியக்காரர்களுக்கு ஆளில்லை, தோட்டிகளுக்கு ஆளில்லை, போலீஸ் வேலை பார்க்க ஆளில்லை, போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு ஆளில்லை! 'அதோ பார் 40 கோடி மக்களும் எங்கள் பக்கம் இருக்கிறார்கள்" என்று கூறி வெள்ளைக்காரனை விரட்டி இருக்கலாமே என்று நேரு வருத்தப்பட்டிருப்பார்!

"பரவாயில்லை, பரவாயில்லை! இப்போது கூட பரவாயில்லை! இனி தேர்தல் தேவையில்லை! ஓட்டுச் சாவடியும் தேவையில்லை காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்களை யெல்லாம் வீட்டிலேயே

# கறுப்புக் கொடி காட்டுவது ஜனநாயகமல்லவாம்!

## வீடு வீடாகச் சென்று மக்களைத் தடுப்பது தான்

# காங்கிரஸ் ஜனநாயகமாம்!

## பேஷ், பேஷ் நல்ல ஜனநாயகம் இது நல்ல ஜனநாயகம்!

இருக்கச் சொல்லி விடுவோம்—எத்தனை பேர்கள் வெளியே வருகிறார்களோ அவர்கள் மட்டும் தான் எதிர் கட்சிகளின் ஓட்டர்கள் என்று கணக்குப் போட்டுக் கொள்ளுவோம்” என்று காமராஜரை தட்டிக் கொடுத்து மகிழ்ந்திருப்பார்!

இனி உலகத்தில் கிளர்ச்சியே இருக்காது—இனச் சண்டை மதச் சண்டை கடவுள் சண்டை ஒன்றுமே இருக்காது! மொழிச் சண்டை, நாட்டுச் சண்டை எதுவுமே தலை காட்டாது! “வாழ்க காமராஜ், வாழ்க” என்று உலகமே போற்றும்!

“தங்கள் டவுனுக்கு ஜனாதிபதி வரும்போது மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று தி. மு. க.வினர் வேண்டுகோள் விடுக்கட்டும்! இதனால் டவுன்களில் ஜனப் போக்குவரத்தில்லாமல் போய் ஜனாதிபதி பேசும் கூட்டங்களிலும் கூட்டமே இல்லாமல் போனாலும்-மக்கள் தி.மு.க.வினர் விடுத்த வேண்டுகோளுக்கு செவி சாய்த்திருப்பார்கள் என்று நாங்கள் புரிந்து கொள்ளுவோம்!”

இது ஒரு முதலமைச்சர் பேசியது! அதுவும் தியாகங்கள் பல புரிந்த ஒரு அரசியல்வாதி பேசியது! ஆம் நம்முடைய பெருமதிப்பிற்குரிய காமராஜர் சொன்னது தான் இது!

இந்த நிலை வருமானால் இந்த கிளர்ச்சிக்கே வேலை ஏது? ஜனாதிபதி ஏன் இங்கு வரப் போகிறார், காமராஜர் தான் ஏன் இப்படிப் பேசப் போகிறார்!

“திராவிட நாடு ஒரு நாளும் கிடைக்காது, பிரிவினையை ஒரு நாளும் மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்” என்ற சொல்லி வரும் நீங்கள், உங்கள் அபார யோசனையைத் தான் கையாண்டு பாருங்களேன்!

அண்ணாதுரை ஒவ்வொரு ஊர்களிலும் பேசும் போது—யாரும் வெளியே வரக்கூடாது, அவர் கூட்டங்களுக்கும் போகக்கூடாது” என்று காமராஜர் வேண்டுகோள் விடுக்கட்டும்! அண்ணாதுரை பேசுகிற கூட்டத்தில் ஆளே இல்லாமல் போய், வெறும் மைக்கும், மேஜையும் மட்டுமிருந்தால் -“எங்களை மக்கள் ஆதரிக்கவில்லை, உங்களைத் தான் ஆதரிக்கிறார்கள்” என்று நாங்களும் புரிந்து கொள்ளுகிறோம்! இந்த நிலை ஏற்படுமானால் எங்கள் கட்சியை கலைத்து விட்டு உங்களுக்கு அடிமையாகி விடுகிறோம்” என்று நாங்களும் உங்களுக்குச் சொல்லி விடுவோம்! ஆனால், எங்கள் அண்ணா “இந்த அரசியல் அநாகரிகம் உங்களுக்கு எப்படி வந்தது? நீங்களா என் தம்பிமார்கள்” என்று கேட்டுவிடுவாரே! என்ன செய்வது! எங்கள் குடும்பம் அப்படிப்பட்ட குடும்பம்!

“இன்று காமராஜர் நம்மைப் பார்த்துக் கேட்கிற இதே கேள்வியை அன்றைய தினம் வெள்ளைக்காரன் அவரைப் பார்த்துக் கேட்டிருந்தால் இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்திருக்குமா” என்பதை அரசியல் ஞானமுள்ளவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

கிராமத்து மக்கள் திண்ணையில் உட்கார்ந்து பேசும் கவைக்குதவாத அரசியலை ஒரு நாட்டின் முதலமைச்சர் பேசுவது சரியல்ல! நாட்டின் தரத்திற்கும் ஏற்றதல்ல!

கறுப்புக் கொடி பிடிப்பவர்களை— முன்பு போல் சில மணி நேரங்களிலோ, சில நாட்களிலோ விடுதலை செய்துவிட மாட்டேன் கடுமையாகத் தண்டிப்போம்” என்றும் கூறி இருக்கிறார்!

ஹிட்லர் சொல்ல வேண்டியதை முசோலினி கூற வேண்டியதை, அயுப்கான் கட்டளையிட வேண்டியதை நமது காமராஜர்-ஒரு குடியரசு நாட்டின் முதலமைச்சர் செய்வதென்றால் ஜனநாயகம் ஏன், மந்திரி சபை தான் ஏன்? காமராஜர் சர்வாதிகாரியாகி தன் இஷ்டப்படி இந்த நாட்டை ஆட்டிப்படைக்கலாமே! இந்த நாட்டு மக்களை சிறையிலே தள்ளி அடிமை நாய்களைப் போல் மக்களை அடித்துக்கொல்லலாமே! இதை விட்டு விட்டு எதற்காக ஜனநாயகத்தின் பெயரால் சர்வாதிகாரம் செய்ய வேண்டும்!

கறுப்புக் கொடி பிடிக்கும் தோழர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுத்து சித்திரவதை செய்தாலும் அஞ்ச மாட்டார்கள்! கடுங்காவல் தண்டனையைக் கொடுத்து கடுமையாக உழைக்கச் சொன்னாலும் கவலைப்பட மாட்டார்கள்!

கூழ் கலயத்தைக் கையிலே கொடுத்து, நார்சாற்ற மடிக்க கூழைக் குடிக்கச் சொன்னாலும், எங்களை மாடுகளாக்கி செக்கை இழுக்கச் சொன்னாலும் “சிதம்பரம், சிதம்பரம் — கப்பலோட்டிய சிதம்பரம், செக்கிழுத்த சிதம்பரம்” என்ற தாரக மந்திரத்தை ஓதிக் கொண்டே செக்கிழுப்போம்!

எங்களை மண்டையை உடைத்து கீழே தள்ளி உயிரைப் போக்கினாலும்—“திருப்பூர் குமரா, திருப்பூர் குமரா—பாரடா உன் பரம்பரையை” என்ற முழக்கத் தோடு தான் அடிபடுவோம், உதை படுவோம், உயிர் விடுவோம்!

திருப்பூர் குமரன் செத்து மடிந்த பிறகு தான், வ. உ. சிதம்பரம் பல இன்னல்களை அனுபவித்த பின்பு தான், பகவத் சிங், சுகதேவ், ராஜ்குமார் போன்ற தியாகிகள் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பின்பு தான் இந்த நாடு விடுதலை பெற்றது என்பதை காமராஜர் அறிய வேண்டும்

எங்களுக்கு நாடு தர வேண்டாம்—உங்கள் அடக்குமுறைகளால் அந்தத் தியாகப் பட்டியலை உண்டாக்கித் தாருங்கள் அதுவே போதும் அது தான் நீங்கள் எங்களுக்குச் செய்கிற கைம்மாறுமாகும்!

ஆயிரக் கணக்கான வீரர்களுக்கு நீங்கள் என்று சமாதி கட்டி மகிழ்வீர்களோ, அன்றே உங்கள் ஆட்சிக்கும் சமாதி கட்டப்படும்! அந்த சமாதியில் தான் இந்த நாட்டின் விடுதலையும் அரும்பும்!

அருமையான சந்தர்ப்பம்! அரிய வாய்ப்பு!

மாணவ மாணவிகளுக்கு கர்நாடக சங்கீத பயிற்சி அளிக்கப்படும்!

கர்நாடக சங்கீதத்தை பயிற்சியளிக்க திறமை பெற்ற K. P. சாமி அவர்கள் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கர்நாடக ஆரம்ப சங்கீத பயிற்சியை அளிக்க முன் வந்துள்ளார்.

விபரங்கட்கு:
K. P. சாமி,
14, சுபத்திரால் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

# நமக்கு வழிகாட்ட அண்ணா இருக்கிறார்!

## அவர் வழி நடக்க அனைவரும் ஒன்றுபட வாரீர்!

## வாக்குறுதியால் வடவர்கள் நம் பிடியில் சிக்கினர்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இருந்தது. அதில் 1965க்குப் பின் ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் வாக்குறுதி மீறவில்லை என்று துணிந்து கூற முடியாத நிலையில் தானிருந்தது.

காங்கிரஸ் கட்சி பிரமுகர்களால் கூட ஆங்கிலம் நீடிக்கும் என்று வாதாட முடியவில்லை! பத்திரிகைகள் குடியரசுத் தலைவர் அறிக்கையை கண்டனம் செய்து தலையங்கம் தீட்டியுள்ளன.

இந்த சூழ்நிலைகளைக் கண்ட நாம் குமாரபாளையத்தில் நம் பொதுக் குழுவைக் கூட்டினோம் இந்தியை எதிர்த்துப் போராடுவது என்று முடிவு கட்டினோம், நாம் டெல்லி ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இந்தி ஆதிக்கக்காரர்களுக்கு ஆகஸ்டு 30-ம் நாள் வரை தவணைக் கொடுத்தோம், போராட்டக் குழுத் தலைவர் சம்பத் அவர்கள், பிரதமர் நேருவுக்கும் குடியரசுத் தலைவருக்கும் கடிதங்கள் எழுதினார். அதில் அவர்களது செயலாளர் கையொப்பமிட்டு, கடிதம் கிடைத்தது, என்று சொல்லாமல் சொல்லியனுப்பினர்கள். நாம் குடியரசுத் தலைவர் தாக்கீதை திரும்பப் பெற வேண்டுமென்பதற்கு எந்த பதிலும் இல்லாமலிருந்தது நமது கோரிக்கைக்கு தக்க மதிப்பளிப்பதாகத் தெரியவில்லை இந்த சூழ்நிலையில் குடியரசுத் தலைவர் தமிழகத்திற்கு பவனி வருவதாக அறிக்கை விட்டிருந்தார்! இதைக் கண்ட நாம் இதற்கு ஓர் முடிவெடுக்க கோடம்பாக்கத்தில் நமது அண்ணா அவர்கள் தலைமையில் சென்ற ஞாயிறன்று மாநாடு நடத்தினோம்

குடியரசுத் தலைவர் தென்னகத்து மக்கள் மனம் புண்படச் செய்து விட்டு வருகிறார்! அவர் வருகை நம்மை அவமதிப்பதாக இருக்கிறது என்று நம் அண்ணா அவர்கள் கூறி நமக்கு ஒரு விளக்கம் தராது குடியரசுத் தலைவர் வந்தால் கருப்புக் கொடி காட்டுவது என்று கருப்புக் கொடியை நம் தோழர்களுக்கும், மேயருக்கும் கொடுத்தார். எங்கள் பிரச்சனை பற்றி நல்ல முடிவு கூறினால் முதலில் எங்கள் மேயர் தான் வரவேற்பார். எங்கள் கோரிக்கையை துச்சமென, தூசியென மதித்தால் எங்கள் மேயர் தான் முதலில் கருப்புக் கொடி கொடுப்பார் என்று அண்ணா மாநாட்டில் கூறினார்.

இதைக் கேட்ட மறு நாள் திங்கட்கிழமை, கோவிந்தவல்லப பந்த் பாராளுமன்றத்தில் இந்தி கட்டாயமில்லை, நேருவின் உறுதி மொழியை மீறவில்லை! ஆங்கிலம் நீடிக்கும் என்று கூறினார்!

குடியரசுத் தலைவருக்கு கறுப்புக் கொடி காட்டுவது சரியல்ல என்று கூறினார். பண்டித நேரு "என் வாக்குறுதியை மீறவில்லை. என் வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்றும் ஆங்கிலம் நீடிக்கும் என்றும் நமது நண்பர் சம்பத்துக்கு 4 மணி நேரத்தில் கடிதம் எழுதினார். அது போன்று குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் ஐதராபாத்தில் நமக்கு வாக்குறுதி தந்திருக்கிறார். அவர் பிரதமர் நேருவின் வாக்குறுதி மீறப்படவில்லை என்றும், இந்தி பேசாத மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக இந்தியை கட்டாயப் படுத்த மாட்டோம் என்றும் ஆங்கிலமே நீடிக்கும். என்றும் பேசியிருக்கிறார்.

நமது நிதியமைச்சர் சுப்ரமணியம், தாழ்ந்து, தலை வணங்கி அடி பணிந்து பத்திரிகை நிருபர்களைக் கூட்டி பேசியுள்ளார். "இந்தியை அவ்வளவு எளிதில் கட்டாயமாக்க மாட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார் குடியரசுத்தலைவருக்கு கறுப்புக் கொடி காட்டுவது சரியல்ல. நாமெல்லாம் விவாதித்து ஒன்று சேர்ந்து போராடி வெற்றிப் பெறுவோம் என்று தாழ்மையோடு கேட்டிருக்கிறார். டில்லி ஏகாதிபத்தியத்தின் தலைவர்களாக உள்ள மூவர் நமது கோரிக்கைக்கு உறுதி கொடுத்திருக்கிறார்கள் இது வரை இப்படி யாருக்கும் கிடைக்காத வெற்றி நமக்கு கிடைத்திருக்கிறது இந்த மூவருமே நம் கோரிக்கைக்கு அடி பணிந்திருக்கிறார் என்றால் இது வெற்றியல்லவா? மகிழ்ச்சியல்லவா? நாம் எடுத்துள்ள முதல் கோரிக்கைக்கு—ஆரம்ப வேலைக்கு பெரும் வெற்றி கிடைத்திருக்கிறது.

நமக்கு நல்ல பிடிப்பு கிடைத்திருக்கிறது. இந்தி நிச்சயமாக வராது என்று, மத்திய அமைச்சர்களும், குடியரசுத் தலைவரும் வாக்குறுதியளித்தால் மட்டும் போதாது. அரசியல் நிர்ணயச் சட்டத்தையே மாற்ற வேண்டும். இதற்காக நாம் போராட வேண்டும்.

கொடுத்த வாக்குறுதியை மீறினால் அவர்கள் முகத்திற்கு முன் கடிதத்தை நீட்டுவோம். பின் நிலைமை வேறு வேறு விதங்களில் வேறு சூழ் நிலைகளில் மாறி விடும். ஆகவே அதற்குள்ளாக அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

அரைகுறை வெற்றியல்ல இது. முழு வெற்றி இந்த வெற்றியைக் கண்டு நாம் மட்டும் மகிழ்ந்திருக்க முடியாது. இன்னும் நாம் எடுக்க வேண்டிய—மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் ஏராளமாக உள்ளது. பல வெற்றிகளைக் காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த வெற்றியைக் கண்டு மகிழும் நேரத்தில் நாட்டுப் பிரிவினைக்கு நல்ல முயற்சியை மேற் கொள்வோமா! அறிஞர் அண்ணா அவர்கள் இவ்வெற்றியைப் பற்றியும். நாம் மேற்கொள்ள வேண்டிய கோரிக்கைகளுக்கும் நல்ல விளக்கம் தருவார்.

நமது அணி வகுப்பு அப்படியே இருக்கும் இன்னும் நம் போராட்டம் முடியவில்லை. நமது இறுதி வெற்றி கிட்டும் வரை நமது அணி வகுப்பு கலையாது!

இன்று நமக்கு வடவர்கள் தந்திருக்கும் உறுதி மொழி நமது பிடியில் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள். என்பதே அதன் பொருளாகும். அந்தப் பிடியிலிருந்து இனி தப்ப முடியாது ஆகவே நாம் இனி அரசியல் சட்டத்தில் இருக்கும் சிக்கல்களை மாற்ற போராட வேண்டும். அப்படிப் போராடுவதற்கு நாமெல்லாம் தயாராக இருக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் நாம் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை நமக்கு வழி காட்ட இருக்கிறார்.

நாம் அவர் சொல்லுகின்ற வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும். ஆகவே நீங்களெல்லாம் நமது மூலாதாரக் கொள்கையான நமது திராவிட நாட்டுப் பிரிவினைக்காக நடத்தும் போராட்டத்திற்குத் தயாராக இருக்கும்படி கேட்டு விடை பெறுகிறேன்.

வணக்கம்

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விட மாட்டோம்!

இந்தியை, சட்டபூர்வமாக ஒழிப்பதற்கான நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுவோம்! அரசியல் சட்டத்தை திருத்தி இந்தியை அகற்ற பெரும் பாடுபடுவோம்!

தென்னகத்து மக்களை வஞ்சிக்க ஆரம்பித்தால்—இந்தியை எப்படியும் திணிப்போம் என்று முழங்கினால் வாளா இருந்துவிட மாட்டோம்—வாள் எடுத்து போர் புரிவோம்!

இந்த வெற்றி அதற்கான உற்சாகத்தை அளிக்கும் என்பதை எவரும் மறந்து விட வேண்டாம்!

இந்த வெற்றியின் பெருமையைச் செல்லிச் சொல்லி மகிழ காரணமாயிருந்த நமது வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் வாயார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்!

அதே போல் இந்த வெற்றிக்கு பெரும் காரணமாயிருந்த நமது சொல்லின் செல்வர் சம்பத் அவர்களுக்கும், அவருக்கு பெருந் துணையாக இருந்து பணிபுரிந்த போர்க் குழு உறுப்பினர்களுக்கும்—தெற்குப அஞ்சாது தியாகத் தழும்புகளை ஏற்க இருந்த எல்லா கழக வீரர்களுக்கும் எங்கள் நல்வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

இந்த வெற்றியைக் கண்டு களிக்கின்ற நாம்—அடுத்து திராவிடத்தின் விடுதலை விழாவைக் கொண்டாடி மகிழ வேண்டும்!

நமது அண்ணா கட்டளையிடும் அந்த நாளை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்!

Registered as a Newepaper in CEYLON

இலங்கையில் 20 சதம்

Regd. No. M. 7074 **MALAIMANI** விலை 16 காசு **Phone 83285**

# 'பாஸ்ட்லி' உடைபட்ட நிகழ்ச்சி
# உங்களுக்கும் தெரியும்— அது எங்களுக்கும் தெரியும்

(அண்ணா பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் உடனே கூறினேன், தாராளமாகக் கையெழுத்துப் போடு. நீயும் தனியாக நேருவுக்கு கடிதம் எழுது, முடிந்தால் நேருவைப் பார்க்கவும் முயற்சி செய் என்று கூறினேன். அதன்படி தான் தம்பி சம்பத் பிரதமர் நேருவுக்குத தன் கையால் கடிதம் எழுதினார். நேருவும் பதிலனுப்பியிருக்கிறார்.

நான் மிக மகிழ்ச்சியோடும் பெருமையோடும், கௌரவத்தோடும் உங்களிடம் கூறுகிறேன். பண்டித நேரு இன்று காங்கிரசிலுள்ளவர்களில் கடைசி ஜனநாயக வாதி. அதனால் தான் அவர் 500 பேர்களைக் கொண்ட பெரிய பாராளுமன்றத்தில் அளவுக்கு மீறிய அதிகமான பெரும்பான்மை உறுப்பினர்களை தன்னிடத்திலே கொண்டிருக்கிற பிரதமர்— அகில உலகத்தில் பெரும் செல்வாக்கை பெற்றிருக்கிற பண்டித நேரு பாராளுமன்றத்தில் இரண்டே இரண்டு அங்கத்தினர்களை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினருக்கு 4 மணி நேரத்தில் பதில் எழுதி யிருக்கிறார் என்றால் அவரது ஜனநாயகப் பண்பை நாம் மதிக்கத் தான் வேண்டும்

இங்குள்ள கோட்டைக் கோமான்கள் பண்டித நேருவின் ஜனநாயகத்தைப் பார்த்த பின்பாவது எனது தம்பிகள் பேசியது போன்று அவர்களுக்கிருக்கும் தாசர் புத்தி மாற வேண்டும்.

நாம் சந்தேகப் பட்டிருந்த ஒரு கோரிக்கையை விளக்கி பண்டித பந்த் உறுதி அளித்தார் பிரதமர் நேரு விளக்கம் தந்து கடிதம் எழுதினார். குடியரசுத் தலைவர் நமது சந்தேகத்தை விளக்கி வைத்தார். இவ்வளவும் செய்த பின்பும் நாம் கறுப்புக் கொடி பிடித்தால் கண்ணியத்தை மறந்தவர்களாவோம். கடமையைத் தெரியாதவர்களாவோம், கட்டுப்பாட்டை மீறியவர்களாவோம் அரசியல் நாகரீகத்தைப் புரியாதவர்களாவோம். ஆகவே நாம் நடந்து கொண்டமுறை சரியான முறையாகும்.

இந்த வெற்றியை சரியான வெற்றியல்ல வென்றும், நமக்கு கிடைத்திருப்பது சரியான வாக்குறுதியல்ல வென்றும், பண்டித நேரு எழுதியுள்ள கடிதம் மதிப்பிற்குரிய கடிதமல்ல வென்றும் எந்த அரசியல் கட்சித் தலைவராவது கூறுவாரானால் அவரும், அவரது தலைமை நிலையமும கீழ் பாக்கத்தில் இருக்க வேண்டிய ஒன்றாகும்.

நான் இந்த சமயத்தில் உங்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்த ஆசைப்படுகிறேன். ஒரு அரசியல் கட்சி தாம் நடத்த விருந்த ஒரு போராட்டத்தை சர்க்கார் இலாகாவின் காரியதரிசி கடிதத்தை வைத்தே தாம் வெற்றியடைந்து விட்டதாக முழக்கமிட்டது. நாம் அப்படியல்ல. இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு நமக்கு கடிதம் எழுதியிருக்கிறார் அதுவும் நமது கோரிக்கையை விளக்கி எழுதி இருக்கிறார். அகில உலகத் தலைவர்களான ஐசனோவர், குருஷேவ், சூ-என்-லாய், மா-சே-துங் போன்றவர்களுக்கு எழுதும் கரத்தால்— அகில உலக விஷயங்களுக்கே மதிப்புக் கொடுத்து விளக்கம் எழுதி வரும் கரத்தால் நமது சம்பத்திற்குக் கடிதம் எழுதி இருக்கிறார். ஏன் எழுதினார். எதற்காக எழுதினார் என்பதைத் தான் சிந்திக்க வேண்டும். நாம் இப்போது பெற்றுள்ளதை விட நமது கரம் இன்னும் அதிகமான வலுப் பெற்று விளங்குமானால்—நமது சக்திகள் பெருமானால் இன்று கடிதம் எழுதிய கரம் நம்முடைய சுதந்திர திராவிட நாட்டின் விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திடும். இன்னும் உங்களுக்கெல்லாம்புரியும்படி கூற வேண்டுமானால் "அந்த கை தான் கை மற்றதெல்லாம்உலக்கை" உங்களுக்கு இன்னும் ஒரு உதாரணத்தை கூற வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

விளையாட்டுச் சாமான் ஒன்று வீட்டின் ஓட்டின் மீது விழுந்து விடுகிறது அதை எடுக்க வேண்டும், நமது கண்ணதாசன் அதை எடுக்க விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். கண்ணதாசன் உயரமானவர் நமது கருணாநிதி அந்த சாமானை எடுக்க முயற்சிக்கிறார். அவருக்கு எட்டவில்லை. அவர் உடனே அவரது துணைவியாரை ஏணியை எடுத்து வரும்படி கூறுகிறார் துணைவியாரும் எடுத்துவரப் போகிறார். கருணாநிதியும் ஏணி வருவதற்குள் துணியை வரிந்து கட்டித் தயாராக நிற்கிறார்

அதற்குள் காற்றடித்து விளையாட்டு சாமான் கீழே விழுகிறது. ஏணியும் எடுத்து வரப்படுகிறது. கருணாநிதி சொல்கிறார் ஏணி வேண்டாம் சாமான் கீழே விழுந்து விட்டதென்று சாமான் விழுந்தாலும் பரவாயில்லை ஏணியைக் கொண்டு வா கூரையில் ஏறிப் பார்க்கிறேன் என்று ஆதித்தன் சொல்கிறார் இது எப்படிப்பட்ட அரசியல் என்பதை யோசித்துப் பாருங்கள்,

குடி அரசு தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் உடல் நலம் சரியில்லாது இங்கு ஓய்வெடுக்கிறார். சென்னை கடற்கரை காற்று உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்திற்கும் நன்மை பயக்கும் அவர் நன்றாக ஓய்வெடுக்கட்டும். குடியரசுத் தலைவருக்கு இந்த நேரத்தில் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களே நீங்கள் இந்த அமைதியான முறையில் ஓய்வெடுக்கிறீர்கள். நிம்மதியான முறையில் இருக்கிறீர்கள். நீங்கள் கறுப்புக் கொடியை காணாது அமர்ந்திருக்கிறீர்கள். இது உங்களுடைய படை பலத்தாலல்ல, பட்டாள பலத்தாலல்ல, போலிசைக் கண்டு அச்சத்தாலல்ல, அதிகார மிரட்டலாலல்ல. எங்களது கண்ணியத்தால், எங்களது கடமையால், கட்டுப்பாட்டால் இந்நிலையை என்றும் மறந்து விடாதீர்கள், தமிழ் நாட்டின் கண்ணியத்தை, அவர்களது பண்பை அந்நிய நாட்டாரும் மதிக்கத்தக்க வகையில் நாங்கள் எங்கள் கண்ணியத்தைக் காட்டியிருக்கிறோம். நீங்கள் இப்போது எங்களது விருந்தாளி ஒரு விருந்தாளியை வரவேற்கும் வகையில் வரவேற்றிருக்கிறோம்.

இதை அமைச்சர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். வீம்பு பேசிக் கொண்டிருக்கக் கூடாது இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நல்ல முறையில் நடந்துகொள்ள முயல வேண்டும்.

வீணாக வீம்பு பேசிக் கொண்டிருந்தால் ஒன்றும் சமாதான முறையில் நடந்து விடாது.

தம்பி சம்பத் நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்றால் இந்த சம்பத்துக்காவது நேருவாவது கடிதமெழுதுவதாவது என்று கையாண்டி செய்து கொண்டிருந்தார்கள். நேரு கடிதம் வந்த பின் அதில் என்ன இருக்கிறது. என்று பேசுவது சரியான முறையாகாது.

உங்களுக்கு விளக்கமாக கூற விரும்புகிறேன். டில்லியிலுள்ள அமைச்சர்களில் கோவிந்தவல்லப பந்த் ஒரு அழுத்தக்காரர். சாமானியமாகவே யாரையும் மதிக்காதவர் உத்திரப் பிரதேச காட்டில் வாழும் சிங்கத்தைப் போன்று வீரத்துடனிருப்பவர். அப்படிப்பட்டவரே உறுதி கொடுத்திருக்கிறார். உலக விவகாரங்களைத் தவிர மற்றவைகளைக் கவனிக்காதவர், உலகத்தில் நடப்பவைகளைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டிருக்கிறவர் நேரு. அவரே கடிதம் எழுதி விட்டார் என்றால் இது மாபெரும் வெற்றியல்லாது இதை வேறு என்ன சொல்வது. நம்மை துச்சமாகக் கருதி வந்த இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு அவமானமாகி விட்டது. அவர்கள் பிதற்றுகிறார்கள்.

நமது மாநில நிதியமைச்சர் சுப்பிரமணியம். பந்து பாராளுமன்றத்தில் பேசியதற்கு மறுநாள் இந்த பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசியிருக்கிறார். அவருக்கு என்னை அழைத்துப் பேச தைரியமில்லை. என்னை அழைத்துப் பேசினால் நமது கழகத்திற்கு வலுவு கிடைத்துவிடுமென்று நினைத்து என்னுடன் அவர் பேசவில்லை. என்னை அழைத்துப் பேசினால் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து விடுமென்று கருதியே என்னை அழைக்கவில்லை பத்திரிகைக்காரர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று எண்ணம் வந்ததே ஒழிய, என்னுடன் பேசி விளக்கம் தர வேண்டுமென்ற ஜனநாயகப் பண்பு அவருக்கு வரவில்லை. ஆனால் அவருடைய தலைவர் நேரு என் தம்பி சம்பத்திற்குக் கடிதம் எழுதி இந்தக்கடிதத்தை அண்ணாவிடம், காட்டு போராட்டத்தை நிறுத்து-கறுப்புக் கொடி காட்டாதே என்பதைக் காட்டுவது போன்று கடிதம் எழுதி இருக்கிறார்.

நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் நிருபர்கள் மாநாட்டில் பேசிய பேச்சு நமக்கு அழைப்புத் தான். இதை சுப்பிரமணியம் மறந்துவிட வேண்டாம் என்று ஞாபகப் படுத்துகிறேன்: நான் அமைச்சருக்கு கூற ஆசைப்படுகிறேன்.

அமைச்சரே நீங்கள் சொன்னபடி நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தப் பாடுபடுங்கள் இப்படி செய்தால் தான் உங்களுடைய சொல்லுக்கு மதிப்பேற்படும். நாங்கள் எங்கள் கண்ணியத்தைக் காட்டி விட்டோம். இதை உணர்ந்து நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

மக்களுக்கு இருந்து வரும் ஆர்வத்தை அமைச்சர் உணர்ந்து பார்க்க வேண்டும். எங்களது போர்ப் படையை இன்னும் நாங்கள் கலைக்கவில்லை அந்த உணர்ச்சி எங்களிடமிருந்து மறையவில்லை. உணர்ச்சியும் ஆர்வமும் மிக்க ஒரு படை அணி வகுத்து நிற்கிறது. எங்களுடைய கதை இத்தோடு முடியவில்லை அது இன்னும் தொடரத் தான் செய்யும்.

நீங்கள் தலை நிமிர்ந்து கம்பீரமாக நடந்து செல்ல வேண்டும். உங்களைப் பார்த்துக் காங்கிரஸ்காரர்கள் கேலியாக—கிண்டலாகக் கேட்பார்கள். "இந்தப் போராட்டம் உங்களுக்கு வெற்றியா" என்று கேட்பார்கள். "ஆம் வெற்றி தான் கடிதம் இருக்கிறது" என்று பெருமிதத்தோடு கூறுங்கள். கறுப்புக் கொடி காட்டவில்லையா என்று கேட்டால் "ஐயோ பாவம்" என்று பரிதாபத்துடன் கூறுங்கள். தமிழ் நாட்டு மக்கள் என்றும் வீரமிழந்தவர்களல்ல. அவர்களுக்கு என்றும் உணர்ச்சி

(6-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்.,
404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.